


சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (27.08.2024) உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுத் துறை பொது விநியோகத் திட்டம், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு. பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த. மோகன், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வு காவல் துறை இயக்குநர் திருமதி சீமா அகர்வால், காவல் துறை தலைவர் க. ஜோஷி நிர்மல் குமார், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அந்நிய முதலீடுகளை ஈர்த்திட

# முதல்வரின் அமெரிக்கப் பயணம் வெற்றிபெற வாழ்த்துகள்!

## தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!



*சென்னை, ஆக. 29 -*

முதல்வரின் அமெரிக்கப் பயணம் குறித்து தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அந்திய முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைத் தொடங்கிட இன்று அமெரிக்கா பயணமாக உள்ள முதல்வரின் பயணம் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தப்பின் அந்நிய செலவாணியை அதிக அளவில் ஈர்த்து, தமிழ் நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கி, பொருளாதார மேம்பாட்டிற்குத் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி பல்வேறு நாடுகளிலிருந்து தொழில் முதலீட்டாளர்களைச் சந்தித்து பேசியும், தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தியும், அந்நிய செலவாணிகளை ஈர்த்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதில் முனைப்புடன் செயல்பட்டு வருவதை இந்த நாடு அறியும்.

அதன்விளைவாகத்தான் இதுவரை 10 லட்சம் கோடிக்கு அதிகமான முதலீடுகளை பெறுவதற்கான புரிந்துணர் ஒப்பந்தங்களும், ஏறத்தாழ 30 லட்சம் பேருக்கான வேலை வாய்ப்பு கிடைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கியுள்ளார். இதன் விளைவாக தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவின் முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. திராவிட முன்னேற்ற கழக அரசு எப்போதெல்லாம் அமைகிறதோ, அப்போதெல்லாம் தொழிற்சாலைகள் தொடங்குவதில் தனிக் கவனமெடுத்து அதற்காக அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் பெரும் பங்காற்றி வந்திருக்கிறது.

அந்த அடிப்படையில் தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கிடவும், அதன் மூலம் வேலை வாய்ப்புகளை பெருக்கிடவும், அதனால் தமிழ்நாட்டினுடைய பொருளாதார மேம்பாட்டை உயர்த்திடவும், அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார். அந்த அடிப்படையில் தற்போது அமெரிக்காவிற்கு பயணமாகி உள்ளார்.

அமெரிக்காவில் பல்வேறு முதன்மை தொழில் முதலீட்டாளர்களை எல்லாம் சந்திக்க உள்ளார். அதன் மூலம் அதிக அளவிலான அந்நிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, தமிழ்நாட்டில் கூடுதலான தொழிற்சாலைகள் தொடங்குவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது. முதலமைச்சருடைய அமெரிக்க பயணம் வெற்றி பெறவும், அதிக அளவில் அந்நிய முதலீடுகளை ஈர்த்திடவும், அதன் மூலம் தமிழ்நாட்டின் பொருளாதார வளத்தை மேம்படுத்திடவும் முதலமைச்சருடைய முயற்சிகளை வரவேற்று பாராட்டுகிறேன். அவரது அமெரிக்கப் பயணம் வெற்றி பெற்றிட வாழ்த்துக்கள்.

இவ்வாறு பொன் குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தென்காசி வடக்கு மாவட்ட

# ஒன்றிய - நகர - பேரூர்க் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்



**மாவட்டக் கழக செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ அறிவிப்பு**

| நாள் / நேரம் / கிழமை | ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் | ஒன்றிய - நகர - பேரூர் கழகங்கள் | இடம் |
|---|---|---|---|
| 29.08.2024 வியாழக்கிழமை காலை 9.00 மணி | T.T.ராமச்சந்திரன் | மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியம் | சமுதாய நலக்கூடம், வேலப்பநாடானூர் |
| 29.08.2024 வியாழக்கிழமை காலை 11.00 மணி | K.V.பெரியதுரை | மேலநீலிதநல்லூர் கிழக்கு ஒன்றியம் | அபிஷேக் திருமண மஹால், குருக்கள்பட்டி |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி | மு.பிரகாஷ் | சங்கரன்கோவில் நகரம் | கணபதி மினி மஹால், சங்கரன்கோவில் |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 8.00 மணி | P.குணசேகரன் | குருவிகுளம் கிழக்கு ஒன்றியம் | பல்நோக்கு மையம், நக்கலமுத்தன்பட்டி |
| 31.08.2024 சனிக்கிழமை காலை 9.00 மணி | கோ.பூசைப்பாண்டியன் | வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியம் | தேவர் திருமண மஹால், தலைவன்கோட்டை |
| 31.08.2024 சனிக்கிழமை காலை 11.00 மணி | செ.சேர்மத்துரை | குருவிகுளம் மேற்கு | சீனிவாசா திருமண மண்டபம், திருவேங்கடம் |
| 31.08.2024 சனிக்கிழமை காலை 12.00 மணி | கா.மாரிமுத்து | திருவேங்கடம் பேரூர் | சீனிவாசா திருமண மண்டபம், திருவேங்கடம் |
| 31.08.2024 சனிக்கிழமை மாலை 3.00 மணி | ரூபி.பாலசுப்பிரமணியன் | வாசுதேவநல்லூர் பேரூர் | விஸ்வகர்மா மண்டபம், வாசுதேவநல்லூர் |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி | ஆ.அந்தோணிசாமி | புளியங்குடி நகரம் | மூர்த்தி பாப்பா திருமண மண்டபம், புளியங்குடி |
| 02.09.2024 திங்கள்கிழமை காலை 9.00 மணி | லாலா P.சங்கரபாண்டியன் | சங்கரன்கோவில் தெற்கு ஒன்றியம் | ஜெய் சாந்தி மஹால், சங்கரன்கோவில் |
| 02.09.2024 திங்கள்கிழமை காலை 10.00 மணி | K.V.வெள்ளத்துரை | சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியம் | ஜெய் சாந்தி மஹால், சங்கரன்கோவில் |
| 02.09.2024 திங்கள்கிழமை நண்பகல் 12.00 மணி | M.பால்ராஜ் | மேலநீலிதநல்லூர் தெற்கு ஒன்றியம் | KSP.திருமண மஹால் வன்னிகோனந்தல் |
| 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி | மா.கடற்கரை | குருவிகுளம் தெற்கு ஒன்றியம் | நாடார் திருமண மஹால், குருவிகுளம் |
| 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணி | R.கிறிஸ்டோபர் | குருவிகுளம் வடக்கு ஒன்றியம் | நாடார் திருமண மஹால், குருவிகுளம் |
| 09.09.2024 திங்கள்கிழமை காலை 10.00 மணி | பொன். முத்தையா பாண்டியன் | வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியம் | தேவர் திருமண மஹால், சிவகிரி |
| 09.09.2024 திங்கள்கிழமை காலை 11.00 மணி | K.T.C.குருசாமி | ராயகிரி பேரூர் | தேவர் திருமண மஹால், சிவகிரி |
| 09.09.2024 திங்கள்கிழமை நண்பகல் 12.00 மணி | சேது சுப்பிரமணியன் | சிவகிரி பேரூர் | தேவர் திருமண மஹால், சிவகிரி |

அது சமயம் நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார் - முன்னாள் அமைச்சரும் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ச.தங்கவேலு Ex.MP - தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் யூ.எஸ்.டி.சீனிவாசன் - பரமகுரு - மாவட்ட அவைத் தலைவர் கோ.பத்மநாபன் மாநில நிர்வாகிகள் மருத்துவர் . செண்பக விநாயகம் - முத்துச்செல்வி Ex.MLA மாவட்ட நிர்வாகிகள் சரவணன் புனிதா - மனோகரன் - ராஜதுரை - பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமிப் பாண்டியன் - மாரிச்சாமி -பராசக்தி - மகேஸ்வரி - தேவதாஸ் - மாரிச்சாமி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் / எனவே சம்பந்தப்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ' முறையான கூட்ட அழைப்புகள் அச்சிட்டு கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணைஅமைப்பாளர்கள் தலைவர்கள், துணைத்தலைவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் கிளைக்கழக செயலாளர்கள் கிளை பிரதிநிதிகள் பாக முகவர்கள் என அனைவரும் பங்கேற்கும் விதமாக பொது உறுப்பினர் கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கறிஞர் **ஈ.ராஜா** எம்.எல்.ஏ
மாவட்டக் கழக செயலாளர்
தென்காசி வடக்கு மாவட்ட திமுக

### பேச்சுப்போட்டி: திராவிட இயக்கச் சிந்தனைகளை

# முன்னெடுத்துச் செல்லும் போர்வீரர்களாம் இளைஞர்கள்!

மாநில இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பினை தொடர்ந்து கடந்த 24.08.2024 கோவையில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் நானும், கோவி.லெனின், சுகுணாதி வாகர் ஆகியவர்களும் நடுவர்களாக கலந்து கொண்டோம்.மேலும், மாநில இளைஞர் அணித்துணைச் செயலாளர் ஜே.இ. பிரகாஷ், எம்.பி. மேலிடப் பிரதிநிதியாக கலந்து கொண்டார். அங்கு நடைபெற்ற பேச்சுப் போட்டியை தொடங்கி வைப்பதற்காக மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் கார்த்திக், நாடாளுமன்ற உறுப்பினர், மாநில சட்டத்துறை இணைச்செயலாளர், வழக்கறிஞர் கே.எம். தண்டபாணியும், அவர்களோடு இணைந்து கழகத்தின் மூத்த உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவர் முன்னிலையில் கழக மூத்த உறுப்பினர் மெட்டல் கண்ணப்பனது தங்கும் விடுதியில் உள்ள அரங்கத்தில் இருபால் மாணவர்களின் பேச்சுப்போட்டி தொடங்கியது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ஆர்வத்தோடும், அக்கறையோடும் காலை எட்டு மணிக்கே மாணவர்களும், மாணவிகளும் அரங்கத்தில் கூடி தங்களுடைய பெயர்களையும், தாங்கள் பேசவிருக்கின்ற தலைப்புக்களையும் பதிவு செய்தார்கள். பின்னர் மாவட்டக் கழகத்தின் செயலாளர் கார்த்திக் உரையோடும், நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான ஜே.இ. பிரகாஷ் எம்.பி., வாழ்த்துரையோடும், நடுவர்களின் சார்பாக என்னுடைய விளக்க உரையோடும், பேச்சுப்போட்டி தொடங்கியது. மாணவர்களும் மாணவிகளும் தாங்கள் தேர்ந்தெடுத்த தலைப்புகளை மையப்படுத்தி மிகச் சிறப்பாக, குறுகிய காலக் கெடுவில் தங்களின் முத்தாய்ப்பான கருத்துகளை பொருத்தமான உடல்மொழியோடு மன்றத்தில் கூடியிருந்தவர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கு மத்தியில் உரையாற்றினர். மாணவர்களும், மாணவிகளும் உரைநிகழ்த்துவதில் எடுத்துக்கொண்ட அக்கறையும், ஆர்வமும், நடுவர்களையும், கேட்போரையும் வியப்பில் ஆழ்த்தியது.

பரிசுக்கான தேர்வு என்பது, இருபால் மாணவர்கள் தாங்கள் தேர்வு செய்து கொண்ட தலைப்புக்குத் தொடர்பான கருத்துகளை நல்லமொழிநடையில், மக்களை ஈர்க்கும் உடல்மொழியோடு வெளிப்படுத்துகின்ற பாங்கினையும், பக்குவத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, பரிசுக்கானவர்கள் வரிசைப்படுத்தப் பட்டார்கள் நடுவர்களாக அமர்ந்திருந்த எங்களது கருத்துகள் ஒரே மாதிரியாக இல்லாமல் மதிப்பிடுவதில் கொஞ்சம் வேறுபாடுகள் இருக்குமாயின், நடுவர் களாகிய நாங்களே எங்களுக்குள் விவாதித்து ஏற்றத்தாழ்வுகளைச் சரிசெய்வதற்கு சில வரன்முறைகளை வகுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் பரிசு பெறவேண்டியவர்களை வரிசைப்படுத்தினோம்.

போட்டியில் கலந்து கொண்டு வெற்றி வாய்ப்பினையிழந்த மற்றைய இருபால் மாணவச் செல்வங்கள் மனச்சோர்வு அடைந்து விடக்கூடாது என்ற நோக்கத்தில், மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய வழிகாட்டுதல் படி போட்டியில் கலந்து கொண்டு, வெற்றி வாய்ப்பினை இழந்த இருபால் மாணவச் செல்வங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி, அவர்களும், ஓர் வரலாற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம் என்ற பெருமகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் இல்லம் திரும்புவதற்கான ஏற்பாட்டை உருவாக்கினோம்!

எனவே நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும், மகிழ்ச்சியுடன் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பினர். கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி, ப. ராஜ்குமார், கோவை மாநகர் மேயர் ஆர். ரங்கநாயகி, தீர்மானக் குழு இணைச் செயலாளர் பி. நாச்சிமுத்து, மாநில தலைமை இலக்கியப் பேரவை துணைச் செயலாளர் மீனாஜெயக்குமார் மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

கோவை மாநகரத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியினைத் தொடர்ந்து 25.8.2024ஆம் தேதி நடைபெற்ற சுயமரியாதைச் சுடர்ஒளி பரப்பிய பகுத்தறிவு பகலவனாய் உதித்தெழுந்து, உலகுக்கு வழிகாட்டிய அறிவுலக அதிசயம் தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டு மண்ணின் அறிவாலயத்தில் அமைந்துள்ள வழக்காடு மன்றத்தில் மாணவ, மாணவிகளுக்கான பேச்சுப் போட்டி காலை 10 மணிக்கு தொடங்கியது. ஒரு குழுவிற்கு நானும், நண்பர்கள் அமுதரசன், சுகுணாதிவாகர் ஆகியோர் கலந்து கொண்டு நடுவர்களாகப் பணியாற்றினோம். இன்னொரு குழுவிற்கு வழக்கறிஞர், சட்டப் பேரவை உறுப்பினர் பரந்தாமன், கவிஞர்சல்மா, தூத்துக்குடி சரத்பாலா ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றினர். ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் செயலாளர், வீட்டு வசதித் துறை அமைச்சர், தன்னடக்கத் திற்கும், பணிவிற்கும் உறைவிடமான முத்துசாமி, நடுவர்களாகிய நாங்கள் தங்கி இருக்கும் இடம் தேடி வந்து எங்களை வரவேற்று மரியாதை செய்தது, மெய்சிலிர்க்கச் செய்தது! ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம், வடக்கு மாவட்டக் கழகம், ஈரோடு மாநகர்கழகம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த இளைஞர் அணி அமைப்பாளர்கள் முறையே திருவாசகம், திருவேங்கடம், சேந்தப் புகழன் இணைந்து மாவட்டக் கழகங்களின் வழிகாட்டுதலை பெற்று, சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் அன்பிற்கும், பண்பிற்கும் உறைவிடமான நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், மாவட்டக் கழகத்தின் செயலாளர் அமைச்சர் தலைமையேற்க பேச்சுப்போட்டியைத் துவக்கி வைத்து உரையாற்றினார்கள். பிற்பகலில் நடைபெற்ற பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சியில் ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் செயலாளர் மரியாதைக்குரிய நல்லசிவம் கலந்து கொண்டு உரையாற்றி பரிசுகளை வழங்கினார்.

மேலும், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பி.எஸ். சீனிவாசன், மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் எல்.டி.பி. சச்சிதானந்தம், மாநில வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் ராதாகிருஷ்ணன், மாநில மாணவரணி துணைச் செயலாளர் வீரமணி, மாநகரச் செயலாளர் மற்றும் கழக நிர்வாகிகள், செயல் வீரர் எனப் பலரும் கலந்துகொண்டு நிகழ்ச்சியை பெருமைப்படுத்தி னார்கள். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி, கழக மூத்தஉறுப்பினர் சென்னிமலை சேகர், ஈரோடு மாநகரத்தினுடைய மேயர், இயக்கத்தின் முன்னோடிகள் எனக் கலந்துகொண்ட அனைவரும் தங்களின் குடும்ப நிகழ்ச்சியாகக் கருதி, மகிழ்ச்சியோடும், ஆர்வத்தோடும் கலந்து கொண்டார்கள் என்பது திராவிட இனமான உணர்வாளர்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி தரும் இனிப்பான செய்திகளாகும்.

மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பேச்சுப் போட்டிக்காக வழங்கப்பட்ட 10 தலைப்புகளும் காலத்தின் கண்ணாடி மட்டுமல்ல, எதிர்காலத்தில், திராவிட இனமான உணர்வையும், மொழி உணர்வையும், சமத்துவக்கோட்பாட்டையும், சமூகநீதிக்கான இலக்கையும் தங்கு தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு இன்றைய இளைஞர்கள் மூலம் சித்தாந்த வழித்தடம் அமைக்கும் ஓர் அற்புதமான ஏற்பாடு என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
உயர்மட்ட செயல் திட்டக்குழு உறுப்பினர்.

மேலும், இந்த ஏற்பாட்டின் மூலம் தலைமுறை இடைவெளி என்பதை உரிய மாற்றங்களுக்கு உட்படுத்தி, இந்தக் கோட்பாடுகளை முன்னெத்துச் செல்வதற்கு, தங்கு தடையில்லா சரியான வழித்தடம் அமைக்கும் ஓர் அருமையான அறிவியல் ஏற்பாடுதான் இந்த முயற்சி என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை!

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நினைவு நாளையொட்டி இளைஞரணி சார்பாக நடத்தப்படும், இந்தப் பேச்சுப் போட்டிக்கான பத்து தலைப்புகள் அனைத்தும் தந்தை பெரியாரின் கொள்கை இலக்குகள், பேரறிஞர் அண்ணாவின் ஜனநாயகக் கோட்பாடுகள், ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி மாநில சுயாட்சியை ஆவணப்படுத்தி அதனை பெரும்பான்மையான மாநிலங்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதோடு மட்டுமல்லாமல், இந்தியாவின் ஒருமைப்பாட்டை உறுதி செய்ய வேண்டுமானால், அதற்கான தீர்வு மாநில சுயாட்சியாகத்தான் இருக்க முடியும் என்ற இந்திய ஒருமைப்பாட்டிற்கு உயிர்நாடியான முத்தமிழறிஞர் கலைஞரின் மாநில சுயாட்சி கோட்பாடு வெற்றிபெறும்வரை ஜனநாயக வடிவில் போராடக்கூடிய மனநிலை இளைய தலைமுறைக்கு உருவாகிவிட்டது என்பதை இருபால் மாணவர்களின் உரைகளிலிருந்து உணர முடிகிறது. தந்தை பெரியாரின் சாதிய ஏற்றத்தாழ்வுகள் அன்றைய சமத்துவ சமதர்ம, சுயமரியாதைச் சமுதாயம் உருவாக வேண்டும் என்பதில் இளைஞர்களின் ஆர்வமும், அக்கறையும் அவர்களது உரைகளில் வெளிப்படுகிறது.

அதுமட்டுமல்ல; தமிழக முதல்வரின் "திராவிட மாடல் ஆட்சியின்" சட்டங்களையும், திட்டங்களையும் சரியாகப் புரிந்து கொண்டு, திராவிட மாடல் சட்டங்களும், திட்டங்களும், சாதாரண சாமானிய மக்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் எப்படி பயன்படுகிறது என்பதையும், திராவிட மாடல் ஆட்சியில், கல்வி, சுகாதாரம், சமூக நீதி ஆகிய அடிப்படைகளைக் கொண்ட சட்டங்களும், திட்டங்களும், ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்குப் படிக்கட்டுகளாக அமைந்துள்ளது என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு இருபால் மாணவர்களும் உரையாற்றியது திராவிட கருத்துகளை எதிர்காலத்தில் எந்த சக்தியாலும் வீழ்த்திட முடியாது என்பதை இந்த நிகழ்ச்சிகள் உறுதிப்படுத்தியதோடு, இரு பால் மாணவர்களும் திராவிடக் கருத்துகளை எதிர்காலத்தில் பாதுகாக்கும் அரணாகவும் அகலியாகவும் நிச்சயம் இருப்பார்கள் என்பதை இந்த நிகழ்ச்சிகள் உறுதிசெய்கிறது.

இந்த நிகழ்ச்சிகளை திட்டமிட்டு ஏற்பாடு செய்த மாநில இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாநிலம் தழுவிய இளைஞர் அணி அமைப்புகளுக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த வாழ்த்துகள்!!